# ஆகஸ்ட் 11 - புனித கிளாரா (1194-1253)

இளம் வயதிலிருந்தே இவள் தன்னை கடவுளுக்கு அர்ப்பணிக்க விரும்பினாள். பெற்றோர் இவளை திருமணம் செய்து வைக்க தீர்மானித்தார்கள். 1212-ஆம் ஆண்டு தவக்காலத்தில் புனித அசிசி பிரான்சிஸ் இவரது ஊர்க்கோவிலில் மறையுரைகள் நிகழ்த்தினார். துறவியாக வேண்டுமென்ற தீர்மானித்து குருத்து ஞாயிறு இரவில் பெற்றோருக்குத் தெரியாமல் புனித பிரான்சிஸிடம் அடைக்கலம் புகுந்தாள். அவர் இவளுக்குத் துறவற உடை அளித்தார். பெற்றோர் இவளை எங்கும் தேடினர். இறுதியாக அவளைக் கண்டுபிடித்தார்கள். அவளை இழுத்துப போக பெரு முயற்சி செய்தார்கள். இவள் பீடத்தை இறுகப் பிடித்துக்கொண்டாள். திடீரென அவள் தன் தலையில் இருந்த முக்காட்டை அகற்றினாள். அவளது நீண்ட பொன் மயமான தலை ரோமம் வெட்டப்பட்டிருப்பதை பெற்றோர் கண்டனர். அதிலிருந்த இனி அவள் வரமாட்டாள் என்று அறிந்தார்கள். “பெற்றோரே, என்னை கடவுள் தமது சேவைக்கு அழைத்திருக்கிறார். இயேசுவைத் தவிர வேறு யாரையும் பர்த்தாவாக தேர்ந்தொடுக்க மாட்டேன்” என்று கூறிவிட்டாள். இவளைக் கொண்டு புனித பிரான்சிஸ் ஒரு புதிய கனனியர் சபையைத் தொடங்கினார். இதுவரை பெண்கள் அனுசரிக்காத தவமுயற்சிகளையெல்லாம் இந்த சபையினர் அனுசரித்தனர். ஒவ்வொரு நாளும் ஒருசந்தி, உபசாம், கிளாராவின் தந்தை தாராளமான செத்துக்களை இவளுக்கு விட்டுச் சென்றார். இயேசுவைப் பின்பற்றித் தரித்திரத்தில் வாழ விரும்பிய கிளாரா அனைத்தையும் ஏழைகளுக்கு கொடுத்து விட்டாள். “இவ்வளவு கண்டிப்பான தரித்திர வாழ்வு உதவாது. வருமானம் தரக்கூடிய சொத்துக்களை வைத்துக்கொள்” என பாப்பு மொழிந்தார். இவள் மறுத்து விட்டாள். “நாங்கள் மிக மிக ஏழைகள் என்று எல்லோரும் சொல்லுகிறார்கள். கடவுளைக் கொண்டிருப்பவர்கள் ஏழைகள் அல்ல” என்று இவள் கூறினாள். எதிரிகள் படையெடுத்து வந்தனர். “ஆண்டவரே, உம்முடைய ஊழியர்களாகிய நாங்கள் அவிசுவாசிகளான இவர்களது கையில் அகப்பட்டு அழிவது உமது விருப்பமா?” என்று மன்றாடினார். இவளது மன்றாட்டுக்கு கடவுள் செவிசாய்த்தார். எதிரிகள் திடீரென அச்சம் கொண்டு ஓடி மறைத்தார்கள். “ஆண்டவரே, உமது பிரியம் போல் என்னை நடத்தும், எனது மனதை நான் உமக்கு அர்ப்பணித்திருக்கிற படியால் நான் உமது சொந்த பொருளாகிறேன். என் மனது இனி என்னுடையது அல்ல” என்று இவள் அடிக்கடி கூறுவாள்.



**சிந்தனை:** திவ்விய நற்கருணையைக் கொண்டு இவள் எதிரிகளை முறியடித்தாள். அதைப்போல நாமும் திவ்விய நற்கருணையைக் கொண்டு நம் ஆன்மாவின் எதிரிகளை முறியடிக்கலாம். திவ்விய நன்மை வாங்கிய பின் ஆன்ம மருத்துவரான இயேசுவுடன் கலந்து பேசுவேன். பாவத்தை விலக்கும் வகையை சொல்லித் தர அவரை மன்றாடுவேன்.

**செபம்:** திவ்விய நற்கருணையில் இருக்கிற இயேசுவே, உலகம், அலகை, உடல் இவற்றை முறியடிக்க எனக்கு உதவி செய்யும்.